மலர்-2 இதழ்-8

FEBUARY 2026

BALA MANDIR

MALARUM MOTTUKKAL

www.kinshipcare.in

www.balamandir.org



மலரும் மொட்டுக்கள்

- TEAM MEETING
- HR & HRF
- PARENTS' CORNER
- PONGAL CELEBRATION KANCHIPURAM
- CHILDREN'S CORNER

BALA MANDIR
FEBUARY 2026

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in



கின்ஷிப் கேர்

பால மந்திரின் கின்ஷிப் கேர் திட்டம் பல்வேறு மாவட்டங்களில் உள்ள **1,165** குடும்பங்களைச் சேர்ந்த **2,026** குழந்தைகளுக்கு ஆதரவு அளித்து வருகின்றது.



தன்னார்வலர்கள் சந்திப்பு:





கின்ஷிப் கேர் திட்டத்திற்கான நிதிகளை திரட்ட உதவி செய்து வரும் தன்னார்வலர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், கடந்த ஜனவரி **18**ஆம் தேதி தன்னார்வலர்கள் சந்திப்பு நடைபெற்றது.

நிகழ்ச்சியின் போது, குழந்தைகளின் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டும் கேஸ் ஸ்டடிகளும், சமூக பணியாளர்களின் தனிப்பட்ட அனுபவங்களும் பகிரப்பட்டன. இதன் மூலம், தன்னார்வலர்கள் தங்களின் தொடர்ச்சியான ஆதரவினால் குழந்தைகளுக்கு பாதுகாப்பு உணர்வும் எதிர்காலத்தின் மீது நம்பிக்கையும் ஏற்படுகின்றது என்பதை அறிந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் முடிவில், பால மந்திரும் தன்னார்வலர்களும் குழந்தைகளின் வளர்ச்சிக்காக ஒன்றிணைந்து செயல்படுவோம் என்ற உறுதிமொழியுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.





BALA MANDIR
FEBUARY 2026

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in



பொங்கல் விழா - PONGAL CELEBRATION KANCHIPURAM











காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த வாலாஜாபாத்தில் பிளாக் கனெக்ட்டில் சமத்துவ பொங்கல் கொண்டாடப்பட்டது. இதில் 17 குடும்பங்களும் 35 குழந்தைகளும் கலந்துகொண்டனர். பல ஆண்டுகளாக சில குடும்பங்கள் பண்டிகைகளை கொண்டாடாத நிலையில், அவைனவருடன் ஒன்றிணைந்து மகிழ்ச்சியாக சமத்துவ பொங்கலை கொண்டாடினர். பாரம்பரிய முறைப்படி பானையில் பொங்கலிட்டு பொங்கலோ பொங்கல் என்று கூவி மகிழ்ந்தனர். கிட்டார் இசையுடன் பாடல்கள் இசைத்து, பெற்றோர்-குழந்தைகளுக்கான விளையாட்டுகள் நடத்தப்பட்டது. கரும்பின் இனிய சுவையுடன், அந்த நாள் அனைவரின் மனதிலும் என்றும் நிலைக்கும் இனிய நினைவாக அமைந்தது.

BALA MANDIR
FEBUARY 2026

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

KNOW YOUR SOCIAL WORKER



சென்னையை சேர்ந்த திருமதி சரண்யா தேவி அவர்கள், நம் **KC** திட்டத்தில் கடந்த ஒரு வருடமாக பணியாற்றி வருகிறார். குழந்தை பராமரிப்பு மற்றும் வளர்ச்சியில் அனுபவம் உள்ள இவர் குழந்தைகளின் கல்வி மற்றும் வளர்ச்சியில் உள்ள சிரமங்களை அறிந்து அதற்கான வழிக்காட்டுதலை வழங்குவார்.

NMMS தேர்வு:

பொருளாதாரத்தில் பின்தங்கிய திறமைமிக்க மாணவர்கள், வறுமை காரணமாக பள்ளிப் படிப்பை இடைநிறுத்தாமல் **9** முதல் **12**-ஆம் வகுப்பு வரை தொடர்ந்து கல்வி பயில அரசாங்கத்தால் வழங்கப்படும் ஊக்கத்தொகைத் திட்டம் தான் **NMMS.** அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் **8**-ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு இந்த **NMMS** தேர்வை அரசு நடத்துகிறது. இதில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு மாதம் ரூ.**1000** ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது.

சில குழந்தைகளுக்கு அவர்களின் பள்ளியில் பயிற்சி வகுப்புகள் வழங்கப்பட்டிருந்தாலும், **TQI** மற்றும் **SAATHI** நிறுவனங்களுடன் இணைந்து கின்ஷிப் கேர் திட்டத்தின் மூலம் இத்தேர்வில் வெற்றி பெற கூடுதல் பயிற்சி வகுப்புகள் வழங்கப்பட்டன. இந்த பயிற்சிகள் அவர்களின் புரிதலை மேம்படுத்தி, தேர்வுக்கான சரியான வழிகாட்டுதலையும் தன்னம்பிக்கையையும் அளித்தது. இந்த ஆண்டு ஜனவரி மாதம் **13** கின்ஷிப் கேர் குழந்தைகள் **NMMS** தேர்வை எழுதினர்.




BALA MANDIR
FEBUARY 2026
www.balamandir.org
www.kinshipcare.in

MALARUM MOTTUKKAL

ஹாப்பி ரீடிங் – புதிய குழு:

சிறு வயதிலேயே குழந்தைகளின் வாசிப்பு திறனை மேம்படுத்த 'ஹாப்பி ரீடிங்' திட்டம் மூலம் தமிழ் மற்றும் ஆங்கில வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதன் பகுதியாக, **13** குழந்தைகள் கொண்ட ஒரு புதிய ஹாப்பி ரீடிங் ஆங்கிலக் குழு தொடங்கப்பட்டுள்ளது. இது குழந்தைகளிடம் வாசிப்பு திறனை வலுப்படுத்தவும், ஆங்கிலத்தின் மீதான தன்னம்பிக்கை மற்றும் ஆர்வத்தை உருவாக்கவும் உதவுகிறது.





அனுபவமுள்ள தன்னார்வலர்கள் இந்த வகுப்புகளை நடத்துகின்றனர். வாரத்திற்கு இரண்டு முறை நடைபெறும் இந்த வகுப்புகளில் குழந்தைகள் ஆர்வத்துடன் பங்கேற்கின்றனர்.

திட்டமிட்ட மற்றும் வயதிற்கேற்ற எளிய கற்றல் செயல்பாடுகளின் மூலம் அவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைகின்றனர்.

ஹாப்பி ரீடிங் பவுண்டேசன்



Happy Reading Foundation திட்டத்தின் **3** புதிய குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. இது ஆரம்பக் கல்வி கற்கும் குழந்தைகளின் ஆங்கில வாசிப்பு திறன் மற்றும் எழுத்துக்களின் உச்சரிப்பை மேம்படுத்த உதவுகிறது. இது குழந்தைகளுக்கு கல்வியின் மீது ஆர்வத்தை ஏற்படுத்தி பயத்தை போக்குகிறது. வாரத்திற்கு **2** நாட்கள் வீதம் நடத்தப்படும் இவ்வகுப்பில் குழந்தைகள் உற்சாகமாக கலந்து கொண்டு பயனடைகின்றனர். பெரும்பாலும் பொருத்துக மற்றும் வட்டமிடுக போன்ற செயல்பாடுகள் மூலம் கற்றுத்தரப்படுவதால் குழந்தைகள் ஆர்வத்துடன் பங்கேற்கின்றனர்.

DID U KNOW ? Octopuses

Have three hearts: Two pump blood to the gills, while the third sends it to the rest of the body.

BALA MANDIR
FEBUARY 2026

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

PARENTS' CORNER

குழந்தைகளின் கருத்துக்கள் கேட்கப்பட வேண்டும்:





குழந்தைகள், தங்கள் எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தும் உரிமை பெற்றவர்கள். குழந்தைகள் கூறுவதை, பெற்றோர் காது கொடுத்து கேட்கும் பொழுது, குழந்தைகள் தாங்கள் மதிக்கப்பட்டதாகவும், தங்களின் உணர்வுகள் முக்கியம் என்றும் உணர்கிறார்கள்.

இது குழந்தைக்கும் உங்களுக்கும் இடையே உள்ள உறவை வலுப்படுத்தி, அதிகப்படியான கோவம், அழுகை மற்றும் கத்துவது இல்லாமல், தங்களின் உணர்வுகளை சீராக வெளிப்படுத்த இது உதவுகிறது. வீட்டில் தங்கள் எண்ணங்கள் கேட்கப்படுகிறது என்ற உணர்வு கொண்ட குழந்தைகள், கடினமான தருணங்களில் சரியான வழிகாட்டலை நாடுகிறார்கள்.

வீட்டில் முயற்சிக்க:



- நீங்கள் பதிலளிக்கும் முன் முழுமையாக கேளுங்கள்
- அவர்கள் பேசும்பொழுது இடையில் நிறுத்தவோ திருத்தவோ கூடாது.
- அவர்கள் பேசும்பொழுது "நான் கேட்கிறேன்" அல்லது "மேலும் சொல்லுங்கள்" என்று சொல்லுங்கள்
- தினமும் **10** நிமிடம் குழந்தையுடன் இடையூறு இல்லாமல் நேரம் செலவிடுங்கள்

உங்கள் சிந்தனைக்கு:

ஒவ்வொரு நாளின் இறுதியிலும், இந்த கேள்வியை உங்களுக்குள் கேட்டுப்பாருங்கள். இன்று என் குழந்தை பேசியதை நான் உண்மையாகக் காது கொடுத்து கேட்டேனா? அவர்களின் உணர்வுகள் முக்கியம் என்று உணர வைத்தேனா?

BALA MANDIR
FEBUARY 2026

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

CHILDREN'S CORNER

THE MANGO TREE



Raji planted a small mango seed in her backyard. Every day, She ran to the spot and asked her **grandmother**, "Why hasn't it grown yet?"

Her **grandmother** smiled and said, "Good things take time, Raji."
Raji watered the seed daily and protected the soil, even though she saw nothing at first. Weeks passed, and one morning she noticed a tiny green shoot coming out of the soil. Months later, the sapling grew into a healthy tree.
Years passed, and one summer, the tree was full of sweet mangoes. **Raji** happily shared them with his family and neighbours. She then understood what her grandmother had meant.

Moral:

- **Patience helps good things grow.**
- **Hard work and waiting go together.**
- **Success comes to those who wait calmly.**







BALA MANDIR
FEBUARY 2026

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

YOUNG ACHIEVERS



சம்ஹிதா (வேலூர்)
ஆங்கிலம் படித்தல் போட்டி



லக்ஷிதா (விழுப்புரம்)
வகுப்பில் முதல் இடம் .



கிஷோர் (திருப்பத்தூர்)
ஓவியப்போட்டி



தனுஷ் சாய் (சென்னை)
சிறந்த மாணவருக்கான
முதல் பரிசு.



சமேக்ஷா (வேலூர்)
மாநில அளவிலான வில்வித்தை
2ஆம் இடம்



ஆஷ்மா (திருப்பத்தூர்)
துளிர் திறனறில் தேர்வு.



முகேஷ் (திருப்பத்தூர்)
ரெட்கார்ட் சொசைட்டி.



யஷ்வந்த்(வேலூர்)
சதுரங்கப் போட்டி



ராகுல் (திண்டுக்கல்)
இந்தி கைஎழுத்துப் போட்டி.

BALA MANDIR
FEBUARY 2026

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in



மதுநிஷா(வேலூர்) சிறந்த மாணவிக்கான விருதுகள்.



ஸ்ரீநிதி (வேலூர்) சிறந்த மாணவிக்கான விருதுகள்.



அகிலன் (வேலூர்) பட்டமளிப்பு நிகழ்வு.



பிரகதி (திருவள்ளூர்) ஆங்கில பேச்சுப்போட்டி.



அனன்யா (திருவள்ளூர்) கலரிங், ஓட்டப்பந்தயம்.



ரோஹித் ராஜு (திண்டுக்கல்) கைஎழுத்து



கிரிதேவ் (திருவண்ணாமலை) விளையாட்டு போட்டிகள்.

மேலும் பல செயல்பாடுகள் மற்றும் மகிழ்ச்சிகளை கொண்டாடுவதற்காக நாங்கள் மீண்டும் வருகிறோம். உங்கள் வாழ்வில் மாற்றத்தை உருவாக்க, எப்போதும் உங்கள் அருகில் இருப்போம்!